**மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டம் (பிரிவு I)**

மத்திய அதிவேகப்பாதைச் செயற்திட்டத்தின் (பிரிவு I) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. 2015 யூலை 08 இல் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், மத்திய அதிவேபாதையின் நிர்மாணவேலைகள் 04 பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 02 ஒப்பந்த பொதிகளின் கீழ் 36.59 கிலோமீற்றர்களை உள்ளடக்கிய கடவத்தவிலிருந்து மீறிஹம வரையிலான மத்திய அதிவேகபாதையின் முதல் பிரிவினை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகவுள்ளது. எனினும், சீனா எக்சிம் வங்கியுடனான உதவியுடனான நிதி ஏற்பாடுகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 29 இல் தொடங்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு

அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி, உபகரணத்தின் 199 உருப்படிகளை செயற்திட்டத்திற்கு மாற்றியது. எனினும், உரிய சொத்துக்களின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மத்திய அதிவேக பாதை செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 2,944 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,070 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் பிரிவு - I இற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட ஒதுக்கீட்டின் 12 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 130.5 மில்லியன் தொகை மாத்திரம் பொதுத்திறைசேரியால் நிதியங்களை காலநேரத்தில் மீளளிப்பதிலுள்ள காலதாமதம் மற்றும் காணி சுவீகரிப்பு நோக்கத்திற்கான செய்முறையின் பிரயோகத்திலுள்ள காலதாமதங்களால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஒப்பந்த பொதிகளின் கீழ் ரூபா 158,385.78 மில்லியன் கிரயத்தில் சீனா நிர்மாணக் கம்பனிக்கு கடவத்தவிலிருந்து மீறிஹம வரையிலான நிர்மாணத்திற்கான ஒப்பந்தமொன்றை வழங்குவதற்கு 2015 யூலை 06 இல் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. மேலும், வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவைகளுக்கான ஒப்பந்தம் இலங்கை வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 2,548.92 கிரயத்தில் கூட்டுமுயற்சிக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர்களானது பூகோள ரீதியான விசாரணைகள், விரிவான கட்டமைப்பு வடிவமைப்புக்கள் வடிவமைத்தல் மற்றும் சோதனை பில்லிங் ஏனையவை 2016 திசெம்பர் 29 இல் தொடங்கியது.

(ஆ) 26 கிழமைக்குள் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் பூர்த்தி செய்வதற்கும் ரூபா 18.05 மில்லியன் கூட்டுத்தொகையான ஊக்குவிப்பு படிகள் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய நடவடிக்கைகளின் 62 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

காணி சுவீகரிப்பு மீதான கிரயத்தை தவிர்த்து ரூபா 83.91 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தின் 15.5 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 13.04 மில்லியன் தொகை மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு எடுப்பதற்கும், பராமரிப்பதற்குமாக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட அதன் மீதான கட்டுப்பாட்டு குறைபாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டத்தால் வாடகைக்கு எடுக்கப்பட்ட மோட்டார் வாகனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காணிப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ள ஆலோசனையாளருக்கு ஒதுக்கப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்ட எல்லைகளிற்கு மேலதிகமாக 7,207 கிலோமீற்றர்கள் மீளாய்வாண்டின் யூலையிலிருந்து திசெம்பர் வரை ஓடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மோட்டார் வான்களை வாடகைக்கு எடுப்பதற்கான விலைமனுக்களானது அதற்கான போட்டித் தன்மையை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பங்களை தவிர்ப்பதன் மூலம் 13 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களில் 07 வழங்குனர்களிடமிருந்து கோரப்பட்டது. மேலும், தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் உரிய மோட்டார் வானிற்கு மாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

(இ) நிர்மாண ஒப்பந்தகாரர்கால் வழங்கப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான உரிய ஆவணங்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகளானது தவறாக பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதனால் செயற்திட்டத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பொறியியலாளர்கள், மீள்குடியேற்ற உதவியாளர், பெறுகை நிபுணர், காணி அளவையாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் செயற்திட்ட கணிய அளவையாளர்கள் உள்ளடங்கிய செயற்திட்ட பிரதான பதவிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்ததுடன் இது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் சுமூக செயற்பாட்டின் பாதகமாக செல்வாக்கு செலுத்தியிருந்தது.